நகராட்சி அலுவலகம்,
பெரியகுளம்.
நாள். 01.02.2018.

## மன்றக் கூட்ட அறிவிப்பு

2018ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 01ம் நாள். 01.02.2018 ஸ்ரீ ஹேவிளம்பி வருடம் தை மாதம் 19ம் நாள் வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கீழ்கண்ட பொருட்களைப் பற்றி முடிவு செய்ய மன்றம் சாதாரணக் கூட்டம் நடைபெற்றது.

1. பொருள் :– பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான பல்வகை கேட்பு உரிம இனங்களுக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை 3 ஆண்டுகளுக்கு கீழ்க்கண்ட உரிம இனங்களுக்கு அவற்றிற்கு எதிரே உள்ள கால அளவிற்கு ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய பொது ஏலம் விடவும் அதற்குண்டான இதர செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | உரிம இனம் | உரிம காலம் |
|---|---|---|
| 1. | புதிய பேருந்து நிலையம் இருசக்கர வாகனம் நிறுத்தம் வசூல் உரிமம் | 01.04.2018 முதல் 31.03.2021 வரை |
| 2. | புதிய பேருந்து நிலைய பேருந்து நுழைவு கட்டணம் வசூல் உரிமம் | 01.04.2018 முதல் 31.03.2021 வரை |

அலுவலகக்குறிப்பு :-

1. மேற்படி இனங்களை அவற்றிற்கு எதிரே உள்ள கால அளவிற்கு பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்
2. நாளிதழில் விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை அச்சிட்டு மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும், மாணிக்கவிலாஸ் பிரஸ், பெரியகுளம் அச்சகத்தில் அச்சிடுவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.25,000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.
4. ஏலம் போகாத இனங்களுக்கு இரசீது புத்தகம் அச்சிடுவதற்கு மாணிக்கவிலாஸ் பிரஸ், பெரியகுளம் அதற்கு ஆகும் செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 218/2018/அ2)

தீர்மான எண்: 285
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

2. பொருள் :– இந்நகராட்சி ஆணையாளர் திருமதி.அ.மாணிக்க அரசி அவர்களின் ஜனவரி 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.கஎண். 686/2015/சி1)

தீர்மான எண்: 286
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

3. <u>பொருள்</u> :– இந்நகராட்சி பொறியாளர் திரு.ஆர்.திருமலைவாசன் அவர்களின் ஜனவரி 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :-

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.கஎண். 1116/2016/சி1)

தீர்மான எண்: 287

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

4. <u>பொருள்</u> :– பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான TN60K8842 ஈப்பு வாகனத்தின் வாகன காப்பீடு 02.02.2018உடன் முடிவடைவதால், மேற்படி வாகனத்திற்கு வாகன காப்பீட்டுத் தொகை ரூ.13,727/–ஐ UNITED INDIA INSURANCE Company Limited நிறுவனத்திற்கு செலுத்தி வாகன காப்பீடு புதுப்பிக்கப்பட்டதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :-

1. அவசர அவசியம் கருதி மேற்கண்ட கட்டணத் தொகை செலுத்தப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 138/2018/இ1)

தீர்மான எண்: 288

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

5. <u>பொருள்</u> :– பெரியகுளம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 30 வார்டு வரை உள்ள கீழ்க்கண்ட விபரப்படியான அனைத்து தெருவிளக்குகளையும் தனியார் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13899/2016/DO1 நாள்.16.02.2017ல் அனுமதி பெறப்பட்டது. அதன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இந்நகர்மன்றத் தீர்மான எண்.102 நாள்.28.03.2017ல் அனுமதி வழங்கப்பட்டதன்படி 01.04.2017 முதல் மாருதி டிரேடிங் கார்ப்பரேசன், தேனி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு தற்போது வரை நல்லமுறையில் தெருவிளக்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனம் 05.01.2018ம் தேதிய கடிதத்தில் தொடர்ந்து மேலும் ஓராண்டிற்கு மேற்படி பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனம் தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தொடர்ந்து நல்லமுறையில் பராமரித்து வருவதாலும், பொதுமக்கள் தெரிவிக்கும் புகார்களை உடன் சரி செய்து வருவதாலும், மாருதி டிரேடிங் கார்ப்பரேசன், தேனி நிறுவனம் அளித்த கடிதத்தினை பரிசீலனை செய்து 01.04.2018 முதல் மேலும் ஓராண்டிற்கு பராமரிப்பு பணியினை நீட்டிப்பு செய்து தரவும் மற்றும் இப்பணிக்கான செலவினம் ரூ.22.05லட்சத்திற்கு அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | விளக்குகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 4’0 குழல் விளக்கு | 237 |
| 2 | 1X24 வாட்ஸ் CFL விளக்கு | 1200 |

| | | |
|---|---|---|
| 3 | 4X24 வாட்ஸ் CFL விளக்கு | 120 |
| 4 | 1X36 வாட்ஸ் CFL விளக்கு | 15 |
| 5 | M.H.250 வாட்ஸ் விளக்கு | 35 |
| 6 | உயர் மின் கோபுர விளக்கு<br>(M.H.400 வாட்ஸ் – 52 விளக்குகள்) | 5 |
| | மொத்தம் | **1612** |

அலுவலகக்குறிப்பு :-

இந்நகராட்சியில் உள்ள தெருவிளக்குகளை **01.04.2017** முதல் மாருதி டிரேடிங் கார்ப்பரேசன், தேனி நிறுவனத்தின் மூலம் நல்லமுறையில் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்கள் கூறும் குறைகளை உடனுக்குடன் சரிசெய்வதால் இதுவரை எவ்வித புகார்களும் வரப்பெறவில்லை. மேற்படி நிறுவனத்திற்கு இதுநாள்வரை பணி தொடர்பாக குறைகளை தெரிவித்து குறிப்பாணை வழங்கியோ மற்றும் அபராதமோ இந்நகராட்சி மூலம் விதிக்கப்படவில்லை. எனவே இந்நிறுவனத்திற்கு பராமரிப்பு பணியினை **01.04.2018** முதல் ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கக் கோரியும், மேலும் இப்பணிக்கான செலவினம் ரூ.22.05 லட்சத்திற்கு அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2990/2016/இ1)**

தீர்மான எண்: 289
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**6.** பொருள் :– பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான வைகை அணை சாலை பகுதியில் உள்ள உரக்கிடங்கில் மண்புழு உரம் தயார் செய்யும் இடத்தில் உள்ள மின் விளக்குகள் பழுது ஏற்பட்டு பயன்படுத்த முடியாமல் உள்ளதை சரி செய்திட வேண்டி மேற்படி இடத்தில் மின் வயர்கள் மாற்றம் செய்யும் பணி மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மான எண்.262 நாள்.11.12.2017ல் அனுமதி பெறப்பட்டது. அதன்படி மேற்படி பணிக்கு 28.12.2017ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் தேவையான மின்வசதி பணிகள் மேற்கொள்ளுதல் | **ரூ.0.20 லட்சம்** | **கண்ணன் எலக்ட்ரிக்கல்ஸ், சுதந்திரவீதி, தென்கரை, பெரியகுளம் ரூ.19939.80 /–** | **கண்ணன் எலக்ட்ரிக்கல்ஸ், சுதந்திரவீதி, தென்கரை, பெரியகுளம் ரூ.19939.80 /–** |
| **2.** | | | ஓம் முருகா ஏஜென்ஸிஸ், | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஜெயம் நகர்,<br>பெரியகுளம்<br>ரூ.21,111.00 /– | |

<u>அலுவலக குறிப்பு</u> :-

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த கண்ணன் எலக்ட்ரிக்கல்ஸ், பெரியகுளம் நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2340/2017/இ1)

தீர்மான எண்: 290

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) அ.மாணிக்க அரசி
தனி அலுவலர்

/உண்மை நகல்/

ஆணையாளர்
பெரியகுளம் நகராட்சி